**பச்சிளைப்பள்ளி பிரதேச சபை**

**கிளிநொச்சி மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களினை சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 29 மார்ச் 2019 இல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 29 மே 2019 திகதியும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 25 ஒக்டோபர் 2019 திகதியும் சபையின் தவிசாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இன் நிதிநிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டு கொள்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின்படி மீளாய்வாண்டுக்கான நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்படவேண்டிய காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்கீட்டு கொள்கைகளின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் இணைப்புக்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | 2018 ஆம் ஆண்டிற்கான காசுப்பாச்சல் கூற்றானது நிதிக்கணக்கறிக்கையுடன் தவறுதலாக இணைக்கப்படவில்லை. எனினும் பின்னர் தங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. |

**(ஆ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (i) | சில்லறைக் கடன்கொடுத்தோர் கணக்கில் ஏற்பாடு செய்யப்பட்ட | கொள்வனவு செய்யப்பட்ட | ரூபா 54,000 ஆனது 203(1) செலவீன தலைப்பில் |

| | | | |
|---|---|---|---|
| | ஆயுள்வேத மருந்துப் பொருட்கள் கொள்வனவு ரூபா 54,000 மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்படாமல் இருந்ததுடன் 31 திசெம்பர் 2018 நிதிக்கூற்றுகளில் ஆயுள்வேத இருப்பில் உள்ளபடியான இருப்பாக வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | பின்னரே இருப்புக்கு எடுக்க வேண்டும். | செலவீனமாக பதியப்பட்டு சில்லறை கடன்கொடுநர் கணக்கிற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதும் குறித்த நிதியாண்டில் மருந்துகளில் ஒருபகுதி கிடைக்கப் பெறாத பட்சத்தில் இருப்பாக காட்டப்பட்டது தவறாகும். எனினும் இவ் ரூபா 54,000 பெறுமதியானமருந்து இருப்பானது 2019 ஆம் ஆண்டு நிதியாண்டிலேயே முழுமையாக செலவளிக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றேன். |
| (ii) | நிறைவேற்றப்படாத கடந்தகால மூலதன வேலைத்திட்டங்களின் கூட்டுமொத்தம் ரூபா 4,480,868 நிதிக்கூற்றுக்களில் நிலையான சொத்தாக வெளிப்படுத்தப்படுவதால் மீளாய்வாண்டுக்கான நிலையான சொத்து இக்குறித்த தொகையினால் அதிகரித்து காட்டப்பட்டுள்ளது. | வேலைகள் நிறைவேற்றப்பட்ட பின்னரே சொத்துக்களுக்கு கொண்டுவரப்பட வேண்டும் | நிறைவேற்றப்படாத ரூபா 4,480,868 பெறுமதியான சொத்துக்களில் ரூபா 2,000,000 பெறுமதியானது ஏற்கனவே 2015 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்டுள்ளது. மேலும் ரூபா 475,000 பெறுமதியான சோரன்பற்று கொத்திக்குள மயான வேலையானது இடம்பெற்று வருவதால் சொத்துக்கணக்கிலிருந்து நீக்கப்படவில்லை ஏனையவை சொத்து கணக்கிலிருந்து நீக்கப்பட்டுள்ளது. |
| (iii) | ரூபா.48,062,794 தொகையிலான கட்டிடங்கள் குறித்த சபையினால் கையேற்கப்பட்டு பாவனைக்குட்படுத்தப்பட்டு வருகின்ற போதிலும் நிதிக்கூற்றுக்களின் நிலையான சொத்துக்களில் உள்வாங்கப்படாமையினால் மீளாய்வாண்டுக்கான நிலையான சொத்து இக்குறித்த தொகையினால் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. | உடமையாக்கப்பட்ட பின்னர் கணக்கிற்கு எடுக்கப்படல் வேண்டும் | சொத்தாக்கப்படாத ரூபா 48,062,794 பெறுமதியான கட்டடங்கள் நிலையான சொத்துக் கணக்கிற்கு நாட்குறிப்பின் மூலம் தற்போது சொத்தாக்கப்பட்டுள்ளது. |
| (iv) | கடந்தாண்டுகளில் நிறைவேற்றப்படாத ஆறு மூலதன வேலைத்திட்டங்களின் கூட்டுமொத்தம் ரூபா.4,477,868 ஆன தொகை குறித்த ஆண்டுகளில் சில்லறைக் கடன் கொடுத்தோர் மீது ஏற்பாடு செய்யப்பட்டு | வேலைத்திட்டங்கள் முழுமையாக நிறைவேற்றிய பின்னரே நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டுவரப்பட வேண்டும் | நிறைவேற்றப்படாத ஆறு வேலைத்திட்டங்களின் கூட்டு மொத்தம் ரூபா 4,477,868 ஆன தொகை சில்லறைகடன் கொடுநர் கணக்கில் ஒதுக்கப்பட்டு சோரன்பற்று கொத்திக்குளம் |

| | | | |
|---|---|---|---|
| | ஒதுக்கீடுகளாக உள்ளடக்கப்பட்டதுடன் குறித்த தொகைகள் வேலைத்திட்டங்கள் நிறைவேற்றப்படாது இருந்தும் கூட நிதிக்கூற்றுக்களில் நிலையான சொத்தாகவும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. | | அமைத்தலுக்கான ரூபா 475,000 மற்றும் ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட முகமாலை ஆயுர்வேத கட்டிடம் 2,000,000 தவிர்ந்த நிறைவேற்றப்படாத வேலைகளுக்கான ஒதுக்கீடுகள் சொத்துக் கணக்கிலிருந்து நீக்கப்பட்டுள்ளது. |
| (v) | புறநெகும கருத்திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டுக்கு முன்னைய ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்ட நான்கு கட்டிடங்களின் கூட்டுமொத்தம் ரூபா.48,062,794 குறித்த சபையினால் கையேற்கப்பட்டு பாவனைக்குட்படுத்தி வருகின்ற போதிலும் நிதிக்கூற்றுக்களின் நிலையான சொத்துக்களில் உள்வாங்கப்படாமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | நிலையான சொத்துக் கணக்குகளுக்கு கொண்டுவரப்பட வேண்டும் | புறநெகும கருத்திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட நான்கு கட்டிடங்களும் செலவுத் தொகையான ரூபா 48,062,794 ஆனது நிலையான சொத்துக்கணக்கில் தற்போது சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளது. |
| (vi) | மருந்து கொள்வனவிற்கான கொடுப்பனவு 905 இலக்க 31 திசெம்பர் 2018 திகதியிடப்பட்ட உறுதிச்சீட்டின் ஊடாக சில்லறைக் கடன் கொடுத்தோரில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது அத்துடன் மருந்துப் பொருட்கள் கிடைக்கப்பெறாமல் இருந்தும் ஆண்டு இறுதியில் உள்ள இருப்பு மீதியுடன் ரூபா 54,000 கூட்டப்பட்டுள்ளது. | பொருட்கள் பெறப்பட்ட பின்னரே பணம் செலுத்தப்பட வேண்டும். | தற்பொழுது இவ் மருந்து பொருட்கள் கிடைக்கப்பெற்று முழுமையாக பயன்படுத்தப்பட்டுள்ளது. |
| (vii) | ரூபா 520,000 பெறுமதியான 04 வழங்கல்கள் மற்றும் சேவைகள் உரியநேரத்தில் பெற்றுக்கொடுக்காமல் ஒதுக்கீடுகள் சில்லறை கடன் கொடுத்தோருக்கு மாற்றம் செய்யப்பட்டிருந்தது. | உரிய நேரத்தில் வழங்கல்கள் சேவைகள் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2018 ஆம் நிதியாண்டில் கிடைக்கப் பெறாததால் சில்லறை கடன் கொடுநர் கணக்கிற்கு ஒதுக்கப்பட்டது. குறித்த வழங்கல் சேவைகள் அனைத்தும் தற்போது கிடைக்கப்பெற்று சீர் செய்யப்பட்டுள்ளது. |
| (viii) | மீளாய்வாண்டில் எட்டு வேலைத்திட்டங்கள் உரிய காலத்தில் ஒப்பந்தளிப்பு | உரிய காலத்தில் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு | ரூபா 475,000 பெறுமதியான சோறன்பற்று கொத்திக்குள மயான வேலையை தவிர |

| | | |
|---|---|---|
| செய்யப்படாததன் காரணமாக வேலைத்திட்டங்களுக்கான ஒதுக்கீடுகளின் கூட்டுமொத்தம் ரூபா.9,634,565 ஆன தொகை சில்லறை கடன் கொடுத்தோருக்கு மாற்றம் செய்யப்பட்டிருந்தது. | வேலைகள் முடிவுறுத்தப்பட வேண்டும் | ஏனைய வேலைகள் நிறைவேற்றப்பட்டுள்ளது. |

## 1.4 இணக்கமின்மைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை | இணக்கமின்மைகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக் சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 891(1) | பிணைப்பணப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை | உரிய நிதிப்பிரமாணங்களுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | பிணைப்பணப் பதிவேடு தற்போது முழு விபரங்களுடனும் பேணப்பட்டு வருகின்றது. |
| (ii) | நிதிப்பிரமாணம் 881 | ஊழியர் பிணைப்பணம் நியமன திகதியில் இருந்து இரண்டு மாதங்களுக்குள் அறவிடப்பட்டிருக்காமை | உரிய நிதிப்பிரமாணங்களுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | இனிவரும் காலங்களில் 2 மாதங்களுக்குள் அறவிட நடவடிக்கை எடுக்கப்படும். |
| (iii) | நிதிப்பிரமாணம் 571 | இரண்டு வருடத்திற்கு மேற்பட்ட 5 காலங்கடந்த ஒப்பந்தகாரர் வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | உரிய நிதிப்பிரமாணங்களுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட 5 ஒப்பந்தகாரர் வைப்புக்கள் ஆனது ஸ்கலெட் இஞ்சினியரிங் நிறுவனத்திற்கு எதிராக வழக்கு விசாரணை இடம்பெற்று வருவதனால் சீர்செய்ய |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | முடியவில்லை. |
| (ஆ) | மாகாண நிதி ஒழுங்குவிதி இல 163.3 | 15 எண்ணிக்கையான முற்பணங்கள் 31 திசெம்பர் 2018 வரை தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை | மாகாண நிதி ஒழுங்குவிதிக்கு அமைய தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | முற்பணங்களை சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் 31.04.2019 வரை ரூபா 53,363,131 வரையான முற்பணங்கள் சீர்செய்யப்பட்டுள்ளது. |

### 1.4.2 வரித் தேவைப்பாடுகளுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| முத்திரைத் தீர்வைச் சட்டத்தின்படி ஊழியர்களின் சம்பளத்தில் இருந்து அறவீடு செய்யப்பட்ட ரூபா. 22,575 கூட்டுமொத்தமான முத்திவை வரி வருமானவரி திணைக்களத்திற்கு அனுப்பபடாமல் வைப்பு கணக்கில் பேணப்பட்டு வருகின்றமை. | உரிய காலத்தில் இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பப்பட வேண்டும். | முத்திரை வரி வருமான வரித் திணைக்களத்திற்கு அனுப்புவதற்கு உறுதிச்சீட்டு தயாரிக்கப்பட்டு தற்போது கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம்,2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 21,215,468 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 16,471,037 தொகையாக இருந்தது.

### 2.2 நிதிசார் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பெறப்பட்ட முத்திரைக் கட்டணம் ரூபா. 7,985,805 மூன்று மாதங்களுக்கு மேலாக வங்கியின் நடைமுறைக் கணக்கிலேயே பேணப்பட்டு வருகின்றமை. | உரிய காலத்தில் இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | முத்திரைக் கட்டணம் உள்ளடங்கலாக ரூபா 805 மில்லியன் ஆன தொகை தற்பொழுது இலங்கை வங்கி கிளையில் நிலையான வைப்பாக வைக்கப்பட்டுள்ளதுடன் குறித்த நிதிக்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | வருமான மூலம் | 2018<br>மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலமைக்கூற்றின் படியான நிலுவைகள் | 2017<br>மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | - | - | - | - | - | - | - | - |
| (ii) | வாடகைகள் | 3,458,724 | - | 4,395,050 | 332,510 | 4,101,356 | - | 4,193,279 | 657,445 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 925,500 | - | 2,219,769 | 8,200 | 760,550 | - | 1,306,540 | 3,200 |
| (iv) | ஏனைய வருமானம் | 8,670,500 | - | 22,084,652 | 4,935,862 | 8,560,300 | - | 17,137,467 | 4,751,686 |
| | | 13,054,724 | | 28,699,471 | 5,276,572 | 13,422,206 | | 22,637,286 | 5,412,331 |

### 2.3.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | சபையானது தனது வருமானத்தினை பட்டியல்படுத்தி சேகரிப்பதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை கடந்த 10 ஆண்டுகளாக எடுத்திருக்கவில்லை. | வருமானங்கள் பட்டியலிடப்பட்டு அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | சபையானது தற்போது சோலைவரியினை அறவிடும் பொருட்டு அபிவிருத்தியடைந்த பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. |
| (ஆ) | பாதீட்டு மதிப்பீடானது சரியான முறையில் தயாரிக்கப்பட்டிராமையும் மதிப்பீட்டை சரியான முறையில் திட்டமிட்டு நிகழ்ச்சிப்படுத்தாமையாலேயே பாதீட்டு வருமானத்திற்கும் உண்மை வருமானத்திற்கும் இடையே ரூபா.8,200 தொடக்கம் ரூபா.4,935,862 வரையான வேறுபாடுகள் ஏற்பட்டிருந்தன. | பொருத்தமான முறையில் பாதீடுகள் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இனிவரும் காலங்களில் சரியான முறையில் திட்டமிடப்பட்டு பாதீடு தயாரிக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | நிலவாடகை மற்றும் குத்தகை நிலுவைகள் ரூபா 190,735 கடந்த 04 தொடக்கம் 07 ஆண்டுகளுக்கு மேலாக அறவிட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவைகள் அறவிட நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் | நிலவாடகை மற்றும் குத்தகை நிலுவைகள் சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

**2.3.3 வாடகைகள்**

| **கணக்காய்வு அவதானிப்புகள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| வாடகை வருமானமானது பாதீட்டின் 138 சதவீதமாக காணப்பட்டமையானது பாதீடு பயனுறுதி மிக்க கருவியாக பயன்படுத்தப்படாமையை எடுத்துக்காட்டுகின்றது. | பாதீட்டு மதிப்பீடுகள் முறையாக மேற்கொள்ள வேண்டும் | தற்காலிக வாடகை வருமானத்தாலே வருமானம் அதிகரித்து காணப்பட்டது. இனிவரும் காலங்களில் இவற்றினையும் கருத்தில் கொண்டு பாதீடு தயாரிக்கப்படும். |

**2.3.4 ஏனைய வருமானம்**

| **கணக்காய்வு அவதானிப்புகள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| ஏனைய வருமானங்கள் பாதிடப்பட்ட வருமானத்தின் 314 சதவீதமாக காணப்படுவதானது பாதீடு பயனுறுதி மிக்க கருவியாக பயன்படுத்தப்படாமையை எடுத்துக்காட்டுகின்றது. | பாதீடு சரியாக மதிப்பிடப்பட வேண்டும் | எதிர்பார்க்கப்படாத வருமானங்கள் கிடைக்கப் பெற்றதனாலே வருமான அதிகரிப்பு ஏற்பட்டது. |

**2.3.5 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்**

| **கணக்காய்வு அவதானிப்புகள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதம செயலாளர் மற்றும் அனைத்து அதிகாரிகளிடமிருந்து 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 3,200,000 | உரிய காலத்தில் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | நீதிமன்ற தண்டப்பணம், முத்திரைத் தீர்வை என்பன வடமாகாண நிதிய சட்டத்தின் பிரகாரம் அடுத்து வரும் |

| | | |
|---|---|---|
| தொகையான நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் ரூபா 1,712,317 தொகையான முத்திரைக் கட்டணங்கள் பெறப்பட வேண்டியிருந்தன. | | நிதியாண்டிலேயே கிடைக்கப்பெறும். அத்துடன் 2020 நிதியாண்டிலிருந்து பாதீட்டில் இருந்து சீராக அறவிடுவதற்கு ஏதுவாக பாதீடு தயாரிக்கப்பட்டு வருகின்றது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் பொதுச்சுகாதாரம், பொதுப்பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுவழிகள் மற்றும் மக்களின் சுகாதார, வசதி மற்றும் நலன்புரி ஆகியன சபையினால் நிறைவேற்றப்படவேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் பிரகாரம், முக்கிய விடயங்கள் தொடர்பில் உபவிதிகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டிய போதிலும் 2018 திசெம்பர் 31 வரையிலும் எந்தவொரு விடயங்களுக்கும் உபவிதிகள் மேற்கொள்ளபட்டிருக்கவில்லை. | உரிய உப விதிகள் தேவைகளுக்கமைய உருவாக்கப்படவேண்டும். | எமது பிரதேசசபைக்கு உபவிதிகள் தயாரிக்கப்படவேண்டிய தேவைகள் இதுவரை ஏற்படாமையினால் உபவிதிகள் எவையும் தயாரிக்கப்படவில்லை. |

**(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் செயல்படுத்தப்பட்டிருக்க வேண்டிய செயற்பாடுகள் தொடர்பில் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | செயல்நடவடிக்கை திட்டம் உரிய காலத்தில் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | 2019 ஆம் ஆண்டிற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. |

**(இ) எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டினை (Output) அடைவதற்கு தவறியமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| முன்மொழியப்பட்ட திட்டத்தில் குறிப்பிடப்பட்ட ஆறு செயற்பாடுகளின் செயலாற்றலுக்கு ரூபா 650,700 தொகைகள் ஒதுக்கிப்பட்டிருந்த போதிலும், எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டினை அடைந்து கொள்ள முடியாதிருந்தது. | எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டினை அடைவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | டெங்கு கட்டுப்பாட்டிற்கென ஒதுக்கப்பட்ட தொகை வாக்குப் பண மாற்றம் மூலம் டெங்கு கட்டுப்பாடு எரிபொருளுக்கென பயன்படுத்தப்பட்டது. ஏனையவை அவசர தேவைக்கென ஒதுக்கப்பட்டிருந்தது. அவ்வாறான தேவைகள் ஏற்படாததால் செலவுகள் மேற்கொள்ளப்படவில்லை. |

**(ஈ) எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளினை (Out come) அடைவதற்கு தவறியமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| செயல் நடவடிக்கைத்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்காத போதிலும் மீளாய்வாண்டுக்கு முன்னைய ஆண்டுகளில் NELSIPகருத்திட்டத்தின் கீழ் ரூபா 16,693,945 தொகை செலவு செய்யப்பட்டதன் ஊடாக பளை கடைத் தொகுதியின் மேல்தள கலாச்சார மண்டபம் மற்றும் இயக்கச்சி சந்தை தொகுதிகள் கட்டப்பட்டிருந்த போதும் போதுமானமளவில் எதிர்பாக்கப்பட்ட விளைவுகள் சபையினால் அடைந்து கொள்ளபட்டிருக்கவில்லை. | கட்டுமானங்கள் பயன்படுத்தப்பட்டு அபிவிருத்தி விளைவுகள் அடையப்பட வேண்டும் | பளை கடைத்தொகுதி மண்டபமானது மெருகூட்டப்பட்டு வருமான அதிகரிப்பு ஏற்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் சபை தேவைகளுக்கும் பயன்படுத்தப்படுகிறது. இயக்கச்சி சந்தையின் வழங்கப்படாதுள்ள கடைகளினை வழங்குவதற்கு ஏதுவாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதுடன் 27.09.2019 இல் பத்திரிகையில் பிரசுரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. |

## (உ) சுற்றுச்சுழல் பிரச்சினைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மருந்து கழிவுகள் புத்தளம் சீமெந்து கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்படாமல் சபையின் திண்மக்கழிவு திடலில் கொட்டப்பட்டுள்ளதால் சுற்றுசூழல் பாதிப்பு ஏற்பட வாய்ப்பு காணப்படுகின்றன. | சுற்றுச்சூழல் பாதிப்படையாத வகையில் திண்மக்கழிவு செயற்பாடு மேற்கொள்ளப்பட வேண்டும் | எமது பிரதேச வைத்தியசாலையுடன் தொடர்பினை மேற்கொண்டு தற்பொழுது கொட்டப்படுவது நிறுத்தப்பட்டுள்ளது |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பொதுமக்களுக்கு வழங்கப்படுகின்ற சேவைகளுக்காக அறவீடு செய்யப்படும் கட்டணங்கள் மற்றும் விதிக்கப்படும் தண்டப்பணங்கள், திண்மக் கழிவு கட்டணங்கள், வாடகைகட்டணங்கள், வரி அறவீடுகள் தொடர்பாக சட்ட அங்கீகாரம் பெறும் பொருட்டு மீளாய்வாண்டில் எந்தவிதமான வர்த்தமானி அறிவித்தல்கள் எதுவும் குறித்த சபையினால் மேற்கொள்ளப்படவில்லை. | சட்ட அங்கீகாரம் பெற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | அறவீடுகள் கட்டணங்கள் தொடர்பான வர்த்தமானி 2020 ஆம் நிதியாண்டிற்கு பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பற்றாக்குறையான 13 பதவி அணியினை ஆட்சேர்ப்பு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அவசியமான வெற்றிங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் | புதவி வெற்றிடங்களினை நிரப்புவதற்கு ஏதுவாக சுகாதார தொழிலாளிக்குரிய நேர்முகத்தேர்வு நடைபெற உள்ளது ஏனைய வெற்றிடங்களினை நிரப்புவதற்கான கடிதம் உரிய அனுமதிக்காக |

அனுப்பப்பட்டுள்ளது.

### 3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்கு உரித்தான கடைகளை நீண்டகால குத்தகைக்கு வழங்குவதன் மூலம் சபையானது குத்தகை வருமானத்தை பெற்றுக்கொள்கின்ற போதும் கைசாத்திடப்பட்ட ஒப்பந்தத்தின் படி வாடகையானது காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்பட்டு வாடகை நிர்ணயிக்கப்படும் என குறிப்பிடப்பட்ட போதும் கடந்த வருடமோ, மீளாய்வாண்டிலோ எந்தவிதமான மீளாய்வும் மேற்கொள்ளப்படவில்லை. | வாடகை மீளாய்வு உரிய காலங்களில் மேற்கொள்ளப்பட வேண்டும் | சபைக்கு உரித்தான கடைகள் 2015 ஆம் ஆண்டிலேயே வரிமதிப்பீடு மேற்கொள்ளப்பட்டுள்ளதால் 2020 ஆம் ஆண்டில் மீள்மதிப்பீடு செய்யப்பட உள்ளது. |

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.5.1 சொத்துக்களை பதிவேட்டிற்கு உட்படுத்தாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலையான சொத்துக்களின் பதிவேடு சரியான முறையில் பேணப்பட்டிருக்கவில்லை. | பதிவேடு சரியான முறையில் பேண நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | நிலையான சொத்து பதிவேடு சரியான முறையில் இற்றைப்படுத்தப்பட்டு வருகின்றது. |

#### 3.5.2 வாகனங்களின் பயன்பாடு

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | சபையின் பாவனையில் உள்ள 6 வாகனங்களை பயன்படுத்தக்கூடிய நிலமைக்கு மாற்றியமைக்கப்பட்டிருக்கவில்லை. | வாகனங்கள் உச்சளவில் பயன்படுத்தப்பட வேண்டும் | 02 வாகனங்கள் திருத்தப்பட்டுள்ளன. 04 வாகனங்கள் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |
| (ஆ) | சபையின் பயன்பாட்டுக்கென சபைக்கு கடந்த காலங்களில் அன்பளிப்பு | உரிமை மாற்றுவதற்கு | தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்ட 05 வாகனங்கள் நாளது வரை சபைக்கு உடமையாக்கப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | |
| (இ) | சபையினால் 03 water bowser மற்றும் Trailer பயன்படுத்தப்பட்டு வருகின்ற போதிலும் நாளதுவரை வாகனப்பதிவுகள் மேற்கொள்ப்பட்டிருக்கவில்லை. | வாகனப்பதிவு செய்யப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | ஆவணங்கள் இன்மையால் பதிவு மேற்கொள்ள முடியாது உள்ளது. |

**3.6 பெறுகை**

**3.6.1 பெறுகைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது ரூபா 19,908,532 ஆன தொகையிலான ஆக்கப்பொருட் செலவினத்திற்காக பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், பெறுகைத் திட்டமொன்று குறித்த சபையினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகைத்திட்டம் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பெறுகைத் திட்டம் 2019 ஆம் நிதியாண்டிற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டுக்கான பாதீடு செய்யப்பட்ட உரிமம் மற்றும் சுற்றுச்சூழல் உரிமங்கள் மீதான பாதீட்டு வருமானம் ரூபா 434,500 ஆக இருந்த போதும் உண்மையான வருமானம் ரூபா 835,464 ஆக இருப்பது சபையானது தனது ஆளுகைக்கு உட்பட்ட பிரதேசங்களில் உள்ள வியாபார உரிமம் பெறக்கூடிய தற்காலிகமான வியாபார நிறுவனங்கள் | பாதீட்டினை பொருத்தமான முறையில் தயாரித்து வினைத்திறனான கட்டுப்பாட்டுக்களுமைய செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | 2020 ஆம் நிதியாண்டிற்கான பாதீட்டினை இற்றைப்படுத்தப்பட்ட வருமான விபரங்களுடன் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | தொடர்பானவற்றை பாதீட்டுக்கு உள்ளடக்கப்படாமையினால் பாதீட்டை விட உண்மையான வருமானம் 92சதவீதம் அதிகரித்து காணப்படுகின்றது. | | |
| (ஆ) | நிலவாடகை, மற்றும் வர்த்தகமனை தலங்கள் தொடர்பாக பாதீட்டு வருமானம் ரூபா 843,224 ஆக இருந்த போதும் உண்மையானதாக ரூபா 1,287,624 காணப்படுகின்றது. இது பாதீட்டை விட உண்மை வருமானம் 50 சதவீதத்தால் அதிகரித்து காணப்படுகின்றது. இது பாதீட்டு கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பாதீட்டினை பொருத்தமான முறையில் தயாரித்து வினைத்திறனான கட்டுப்பாட்டுக்களுமைய செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | இனிவரும் காலங்களில் வருமானம் சரியாக கணக்கிடப்பட்டு பாதீடு தயாரிக்கப்படும். |